பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**20 01 2026** **6 45**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து அந்நாட்டு அதிபர் பேச்சு நடத்தினார்.

2. தொழில்துறை வளர்ச்சிக்கான ஆராய்ச்சி, மேம்பாடு, புதுமைக் கண்டுபிடிப்புத் திட்டங்களுக்கான நிதியம் விரைவில் தொடங்கப்படும் என்று மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

3. நடப்பாண்டுக்கான முதல் சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் இன்று தொடங்குகிறது.

4. போதைப்பொருள் புழக்கம் காரணமாக தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. பஹ்ரைன் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரார்த்தனா தாம்ப்ரே - ரஷ்யாவின் **Alevtina** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் திரு. ஷேக் முகமது பின் சையத் அல் நஹ்யான், நேற்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது பாதுகாப்பு, விண்வெளி, எரிசக்தி, உணவுப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி, பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளதாக தெரிவித்தார்.

விண்வெளி உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் வர்த்தக ரீதியிலான பயன்பாடு ஆகியவற்றில் இவ்விரு நாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்திற்கும், ஐக்கிய அரபு எமிரேட்சின் ADNOC எரிவாயு நிறுவனத்திற்கும் இடையே எரிவாயு விற்பனை மற்றும் கொள்முதல் தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் சூப்பர் கம்ப்யூட்டிங் தொகுதியை நிறுவுவதற்கு இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வரும் 2032ஆம் ஆண்டுக்குள் இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகத்தை 200 பில்லியன் டாலராக அதிகரிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக திரு. விக்ரம் மிஸ்ரி கூறினார்.

இதனிடையே எல்லை தாண்டிய பயங்கரவாதம் உட்பட தீவிரவாதத்தின் அனைத்து வடிவங்களுக்கும் இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகள் கடும் கண்டணம் தெரிவித்துள்ளன.

<<<<>>>>

மின்னணு கழிவுகளில் இருந்து அரியவகை கனிமங்களை சேகரிப்பதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் உள்ள சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது குறித்து பல்வேறு அமைச்சகங்களுக்கு இடையே ஆலோசனை நடத்தப்பட்டதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்தார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், புதுதில்லியில் நேற்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் திரு. நிதின் கட்கரி, திரு. மனோகர் லால், திரு. கிஷன் ரெட்டி உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள் பங்கேற்றதாக தெரிவித்துள்ளார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மின்னணு சாதனங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் பொறுப்புகளை விரிவுபடுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

நகர்ப்புறங்களில் மின்னணுக் கழிவுகளை கையாள்வதற்கான நடைமுறைகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

Life எனப்படும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்வாதாரம் குறித்த பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப மின்னணுக் கழிவுகளை கையாள்வது குறித்து 7 அம்சக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளதையும் திரு. பூபேந்தர் யாதவ் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

நடப்பாண்டுக்கான தமிழக சட்டப்பேரவையின் முதல் கூட்டத் தொடர் இன்று தொடங்குகிறது.

இந்தக் கூட்டத்தொடரில் ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தொடங்க உரையாற்றுகிறார்.

இந்தக் கூட்டத்தொடரை எத்தனை நாட்களுக்கு நடத்துவது என்பது குறித்து அலுவல் ஆய்வுக் குழு கூடி முடிவு செய்யப்படும்.

<<<<>>>>

மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்குவதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர் பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் மாணவிகளுக்கு மிதிவண்டிகளை அவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், கல்வியின் முக்கியத்துவம் குறித்து முதலமைச்சர் தொடர்ந்து வலியுறுத்தி வருவதை சுட்டிக்காட்டினார்.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பள்ளிகளில் மாணவர்களுக்குத் தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு மாலைநேர சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

மாணவர்கள் சோர்வடையாமல் சிறப்பு வகுப்புகளில் கவனம் செலுத்தும் வகையில் ஊட்டச்சத்து மிக்க சிற்றுண்டி வழங்கப்பட்டு வருவதாகவும் திரு. சேகர் பாபு தெரிவித்தார்.

<<<<>>>>

போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதான் காரணமாக தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைப் பதிவிட்டுள்ள அவர், இதன் காரணமாக குற்றச் செயல்கள் நாள்தோறும் அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த நான்கரை ஆண்டுகால திமுக ஆட்சியில் அரசு அலுவலகங்கள், காவல் நிலையங்கள், நீதிமன்றங்கள், குடியிருப்புப் பகுதிகள், மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள சாலைகள் என அனைத்துப் பகுதிகளிலும் அசாதாரண சூழல் நிலவுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி குற்றச் செயல்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தினார்.

<<<<>>>>

நாடு முழுவதும் புலிகள் கணக்கெடுப்பு பணி நேற்று தொடங்கியது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த கணக்கெடுப்பு பணிகள் நடத்தப்பட்டு வருகிறது.

நெல்லை மாவட்டம் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் இந்த கணக்கெடுப்பு பணிகள் நவீன முறையில் மேற்கொள்ளப்படுவதாக வனச்சரகர் திரு. கல்யாணி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**(Voice Byte - Kalyani - 32 Sec)**

இந்தக் கணக்கெடுப்பு பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளதாக திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர் கிருஷ்ணராஜ் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Krishnaraj - 27 Sec)**

புலிகள் கணக்கெடுப்பு பணிகளை ஒட்டி அப்பகுதியில் உள்ள அகஸ்தியர், மணிமுத்தாறு அருவிகள், களக்காடு தலையணை, நம்பிக்கோயில் ஆகிய பகுதிகளுக்கு சுற்றுலாப் பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் பனிப்பொழிவின் தாக்கம் இந்த ஆண்டு அதிகரித்துள்ளது.

அங்கு நிலவி வரும் உறைபனி காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Saravanan - 29 Sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

நேபாளத்தில் நாடாளுமன்ற தேர்தலையொட்டி அங்கு தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளன.

------------

பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள வணிக வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 26ஆக அதிகரித்துள்ளது.

------------

சிலியில் ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

------------

கர்நாடகாவில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் வாக்குச் சீட்டு முறையைப் பின்பற்ற அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

------------

நீடித்த வளர்ச்சிக்கான நடவடிக்கைகளில் நேர்மையான நிர்வாகம், அறம் சார்ந்த பொறுப்புணர்வு உள்ளிட்ட அம்சங்களை மதிப்பிடும் நடைமுறைகளை முன்னாள் குடியரசுத்தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் தொடங்கி வைத்தார்.

-------------

நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொழில்துறை நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் பின்தங்கிய பகுதிகளில் கடனுதவி வழங்குவதை விரிவுபடுத்துவது குறித்து ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா ஆலோசனை நடத்தினார்.

-------------

பண்டிகை காலங்களில் விமான கட்டணங்களை பெருமளவு உயர்த்துவது குறித்த வழக்கில் விளக்கம் அளிக்குமாறு விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநரகத்தை உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெற்ற ஆற்றுத் திருவிழாவில் பலூன் நிரப்பும் சிலிண்டர் வெடித்தில் காயமடைந்தவர்களை ஆட்சியர் திரு. தர்ப்பகராஜ் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

-முருகேசன்

-------------

பஹ்ரைன் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரார்த்தன தாம்ப்ரே - ரஷ்யாவின் **Alevtina** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை **7-6, 6-2** என்ற செட் கணக்கில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே - சீனாவின் **Wushuang Zheng** இணையை வென்றது.

--------------

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி **61** ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

**<<<<The End>>>>**